25th July 1962]

(*b*) Fifty-nine during the period from 1st January 1962 to 30th April 1962.

(*c*)	(1) Private Operators	50
	(2) Co-operative Society	1
	(3) Madras State Transport Department ...	8
	Total ...	59

சித்த வைத்தியக் கல்லூரி

*652 **கேள்வி.—திரு. ஜே. மாதா கவுடர்:** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் சித்த வைத்தியக் கல்லூரி ஆரம்பிக்க உத்தேசமுண்டா?

(இ) அப்படியானால், எப்போது?

THE HON. SRIMATHI JOTHI VENKATACHELLUM: (*a*) & (*b*) The question of starting a College of Indian systems of Medicine is under consideration of the Government.

திரு. ஜே. மாதா கவுடர்: இந்த சித்த வைத்தியக் கல்லூரி எப்பொழுது ஆரம்பிக்கப்படும்? சர்க்கார் எப்பொழுது முடிவு எடுத்தார்கள், எந்த மாவட்டத்திலே ஆரம்பிக்கப்படும் என்பதை யாவது சொல்ல முடியுமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: இப்பொழுது இந்த வைத்தியக் கல்லூரியை ஆரம்பிக்க வேண்டுமா அல்லது வேண்டாமா என்பதுதான் கன்ஸிடரேஷனில் இருக்கிறது. தீர்மானம் செய்த பிறகு அதைப் பற்றி திட்டவட்டமாகக் கூறமுடியும்.

Non-Tamilian Government Servants

* 653 *Q.*—SRI K. A MATHIALAGAN: Will the Hon. the Minister for Finance be pleased to state the steps taken to make the non-Tamilian Government servants to learn Tamil?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: The Government are examining this matter.

போலீஸ் அதிகாரிகள் (ஸ்காட்லாண்டு யார்டில் பயிற்சி)

*654 **கேள்வி.—திரு. முனு ஆதி:** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலிருந்து இதுவரை எத்தனை போலீஸ் அதிகாரிகள் **cotland yard**-க்குப் பயிற்சிக்காக அனுப்பப்பட்டார்கள்?

(இ) மாநில அரசாங்கமே அனுப்புகிறதா அல்லது மத்திய அரசாங்கத்தின் சிபாரிசின் பேரில் அனுப்புகிறதா?